## மக்களைக் காக்கும் மகத்தான முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு!

# சென்னை மாநகரில் மின்னல் வேகப் பணிகள்!

## மழைநீரை அகற்றும் பணியில் இரவு பகல் பாராது பணியாற்றும் அதிகாரிகள் – ஊழியர்கள்!



பெருநகர சென்னை மாநகராட்சி இராயபுரம் மண்டலம் வார்டு56 பிரகாசம் சாலை, நேற்று (15.10.2024) வடகிழக்கு பருவமழையை தொடர்ந்து இரவு முதல் பெய்த கன மழை காரணமாக தாழ்வான பகுதியில் தேங்கி நிற்கின்ற மழை நீரைஅகற்றும் பணி நடைபெற்றுவருகிறது.



நேற்று (15.10.2024) பெருநகர சென்னை மாநகராட்சி மணலி மண்டலம் பகுதியில் கண்காணிப்பாளர் பெ.குமாரவேல் பாண்டியன் வெள்ள நிவாரண சமையல் கூடத்தினை ஆய்வு செய்தார்கள்.




பெருநகர சென்னை மாநகராட்சி இராயபுரம் மண்டலம் வார்டு56 பிரகாசம் சாலை, நேற்று (15.10.2024) வடகிழக்கு பருவமழையை தொடர்ந்து இரவு முதல் பெய்த கன மழை காரணமாக தாழ்வான பகுதியில் தேங்கி நிற்கின்ற மழை நீரைஅகற்றும் பணி நடைபெற்றுவருகிறது.



வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், இந்திரா நகர், 2வது அவென்வூ பகுதியில் தேங்கியுள்ள மழைநீரினை மோட்டார் பம்புகள் மூலம் மாநகராட்சி ஊழியர்கள் அகற்றி வருகின்றனர்.



வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, மழைக்கால முன்னெச்சரிக்கை நடடிக்கையாக, பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம், வார்டு189க்குட்பட்ட பள்ளிக்கரணை வி.ஜி.எஸ். மஹாலில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் வந்தடைந்தனர், உடன் அரசு அலுவலர்கள் உள்ளனர்.




வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு 49க்குட்பட்ட காசிமேடு, சூர்ய நாராயணா சாலையில் 14.10.2024 அன்று இரவு முதல் பெய்து வரும் கனமழை காரணமாக தாழ்வான பகுதியில் தேங்கி நிற்கின்ற மழைநீரை சென்னைக் குடிநீர் வாரியத்தின் சூப்பர் சக்கர் இயந்திரம் மூலம் மாநகராட்சி பணியாளர்கள் நேற்று (15.10.2024) வெளியேற்றி வருகின்றனர்.



வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாகராட்சி, மணலி மண்டலம், வார்டு 18க்குட்பட்ட பகுதியில் உள்ள மழைநீரினை ஜேசிபி இயந்திரம் மற்றும் மோட்டார் பம்புகள் மூலம் எஸ்.ஆர்.எஃப். கால்வாயில் வெளியேற்றும் பணியினை மணலி மண்டல கண்காணிப்பு அலுவலர் பெ.குமரவேல் பாண்டியன், நேற்று (15.10.2024) பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மண்டல அலுவலர் கோவிந்தராஜ், செயற்பொறியாளர் தேவேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம் வழிகாட்டுதலின்படி, நகராட்சி அதிகாரிகள் மட்டத்தில் வடகிழக்கு பருவ மழை பேரிடர் ஆலோசனை கூட்டம் நடத்தி, உடனடியாக களத்தில் இறங்கி பொதுமக்களின் அடிப்படை சுகாதார பணிகளை போர்கால நடவடிக்கைகளை இராமேஸ்வரம் நகர் மன்றத் தலைவர் – நகர் கழகச் செயலாளர் கே.இ.நாசர்கான் மேற்கொண்டார்.



இராஜபாளையம் தொகுதி, சேத்தூர் பேரூராட்சியிலுள்ள சேத்தூர் சேவுகப்பாண்டியன் அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டியை மாணவ – மாணவியர்களுக்கு இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன் வழங்கினார். இந்நிகழ்வில் தலைமை ஆசிரியர் சகாதேவன், சேத்தூர் சேர்மன் பாலசுப்பிரமணியன், பேரூர் கழகச் செயலாளர் சிங்கப்புலி அண்ணாவி, கவுன்சிலர்கள் சுந்தர், நிஜாம், கழக நிர்வாகிகள், ஆசிரியப் பெருமக்கள் – மாணவ – மாணவியர் கலந்து கொண்டனர்.




கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக பவள விழா பொதுக்கூட்டம் மற்றும் கழக இன்னிசை நிகழ்ச்சி தோவாளை கிழக்கு ஒன்றியச் செயலாளர் த.செல்வன் தலைமையில், ஆரல்வாய்மொழி பேரூர்சக் செயலாளர் கு.சுப்பிரமணியன் முன்னிலையில் நடை பெற்றது. கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்துகொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்து கூறி சிறப்புரையாற்றினார். மேலும் மாநில சிறுபான்மை நல ஆணையம் துணைத் தலைவரும், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளருமான கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் கழக இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லைசெல்வம், அயலக அணி துணைச் செயலாளர் எ.பாபு வினிபிரட், வர்த்தகர் அணி இணைச் செயலாளர் என்.தாமரைபாரதி, நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் செ.காதர் ரஹ்மான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.